1979 மார்ச் 27]

[பிற்பகல் 12—20]

(ஆ) நீலகிரி மாவட்டம், கூக்கல் துறையில் உள்ள அரசு ஆஸ்பத்திரி டாக்டர்களுக்குச் சம்பளம் வழங்கப் படாமையும், அங்கே மருந்துகள் இல்லாமையையும் குறித்து.

திரு. கே. உச்சி : துணைத் தலைவர் அவர்களே, ' நீலகிரி மாவட்டம் கூடலூர் தொகுதியைச் சேர்ந்த கூக்கல் துறையிலுள்ள அரசு ஆஸ்பத்திரியில் பணியாற்றும் டாக்டர்களுக்கு சுமார் ஆறு மாதங்களுக்கு மேல் சம்பளம் கிடைக்காமல் இருப்பது பற்றியும் அந்த ஆஸ்பத்திரியில் எந்த வியாதிக்கும் ஆறு மாதங்களுக்கு மேலாக மருந்துகள் இல்லாமை குறித்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திருச்சி ஆர். சௌந்திரராஜன் : துணைத் தலைவர் அவர்களே, கூக்கல் துறையில் உள்ள பஞ்சாயத்து ஒன்றிய மருந்தகத்தை அரசு ஏற்று நடத்தலாம் என அரசு 1978 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஆணை பிறப்பித்தது. அவ்வாணையிலேயே மேற்கூறிய மருந்தகத்தில் உள்ள மருத்துவ அதிகாரி மற்றும் அலுவலர்களை அரசுப்பணியில் ஏற்றுக் கொள்ளப்படும் வரையிலும், அவர்களது ஊதிய பட்டியல்களை சம்பந்தப்பட்ட கருவூல அதிகாரி அங்கீகாரம் செய்ய பணிக்குமாறு பொதுக் கணக்காய்வாளர் அரசால் கேட்கப்பட்டுள்ளார். இது மட்டுமின்றி மேற்கூறிய மருந்தகம் 1978-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 1-ம் தேதியிலிருந்து அரசால் ஏற்கப்பட்டு அரசு மருந்தகமாக இயங்கி வருகிறது என மருத்துவப்பணி மற்றும் குடும்பநலத்துறை இயக்குநர் பொதுக் கணக்காய்வாளருக்கு ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

ஆனால் பொதுக் கணக்காய்வாளர் சம்மந்தப்பட்ட கருவூல அதிகாரிக்கு உத்தரவு பிறப்பிக்க காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

தற்போது பொதுக் கணக்காய்வாளரின் அங்கீகாரம் பெறப் பெற்று கூக்கல்துறை அரசு மருந்தகப் பணியாளர்களுக்கு ஊதியம் உடனடியாக மாவட்ட மருத்துவ அலுவலர் பட்டுவாடா செய்துள்ளார். மேலும், மாவட்ட மருத்துவ அலுவலர், தலைமையிட மருத்துவமனையிலிருந்து உடனடியாக போதுமான மருந்துகளை கூக்கல்துறை அரசு மருந்தகத்திற்கு வழங்கி குறைகளை நிவர்த்தி செய்துள்ளார்.

திரு. கே. உச்சி: துணைத் தலைவர் அவர்களே, இந்த மருந்தகம், கடந்த மழை காலத்திலே ஏற்பட்ட புயலால் போதுமான கட்டட வசதிகள் இல்லாத நிலையில் இருக்கின்றது. மக்களுக்கு, கடைக்கோடியிலே உள்ள மக்களுக்கு அடிக்கடி மருந்துகள் இல்லை என்று சொல்லப்படுகிற நிலைமை இருக்கிறது, ஆகவே அதைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: துணைத தலைவா அவர்களே, இப்போது அந்த மருத்துவ மனை அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே மருந்து இல்லை என்ற சொல் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து அந்த மருத்துவ மனைக்கு கட்டட வசதிகள் சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அரசு கிராமப்பகுதிகளிலே, மலைப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகளைக் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் அந்த மருத்துவ மனையைப் புதுப்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(6) அரசினர் சட்ட முன்வடிவு

வன (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு வன (திருத்தச்) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.